DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 19/2024**

**Deposition of LW2 examined as PW2** Dt. 09.02.2026

| | |
|---|---|
| Name | ராஜேந்திரன் |
| Father's/Husband's Name | ராமர் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 09.02.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை ரயில்வே நிலையத்தில் போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம்ஆண்டு முதல் 2024 ம் வரை ஆனந்ததாண்டவபுரம் முதல் புதுசத்திரம் மற்றும் நன்னிலம், பேரளம் ஆகிய ரயில் நிறுத்தங்களுக்கு போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் அ.சா.1 வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் அவரிடம் தகறாறு செய்ததாக என்னிடம் அலைபேசியில் தெரிவித்தார். நான் உடனே தகறாறு செய்த நபர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்குமாறு அ.சா.1 னிடம் கூறினேன். பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

எதிரியை எனக்கு தெரியும். அவர் அ.சா.1 னுடன் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் பாயிண்ட்ஸ் மேனாக பணிபுரிந்து வந்தார். கடந்த 08.10.2023 ம் தேதி காலை 5.00 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் அ.சா.1 ஸ்டேஷன் மாஸ்டராக பணியில் இருந்த போது எதிரி ராஜசேகரன் அவரிடம் லீவு தருமாறு கேட்டதற்கு அ.சா.1 ஸ்டேஷன் டிரான்ஸ்போர்ட் இன்ஸ்பெக்டரிடம் பேசிவிட்டு ஆறு மணிக்கு மேல் பதில் சொல்வதாக கூறியதாகவும், அப்போது எதிரி ராஜசேகரன் ஆத்திரமடைந்து *டார்ச் லைட்டால் அ.சா.1 ன் இடது முழங்கை மற்றும் உதட்டிலும் அடித்து* காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் ஸ்டேஷன் ஸ்டோர் ரூமில் இருந்த அருவாளை எடுத்து வந்து அ.சா.1 னை தாக்க முற்பட்டதாகவும், என்னிடம்

9/2/26 09/2/26.

கூறியதற்கு நான் புகார் மனு கொடுக்க அறிவுறுத்தியதாக போலீசார் விசாணையில் கூறிவிட்டு, தற்போது அ.சா.1 எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

09/2/26

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

9/2/26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை